©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 266] CHENNAI, MONDAY, SEPTEMBER 24, 2012
Purattasi 8, Thiruvalluvar Aandu–2043

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்**

**இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளுந்துரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க./ஊ.நி.6/1151/2012)*

**No. VI(2)/252(a)/2012.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (1994ஆம் ஆண்டு 21வது சட்டம்) பிரிவு 205–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளுந்துரை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. கஜேந்திரன் என்பவர் ஊராட்சி நிதியினை முறைகேடாக செலவு செய்தும் விதிமுறைகளை மீறி செயல்பட்டு அதிகாரம் துஷ்பிரயோகம் செய்தும் ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக அன்னார் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து எனது உள தேர்வின்படி கொளுந்துரை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. கஜேந்திரன் என்பவரை ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம்,
**2012 செப்டம்பர் 24.**

**க. நந்தகுமார்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (266)